பகுதியில் Mini Indoor Stadium அமைப்பதற்கான நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர், மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

தொழிற்பயிற்சி நிலையம்

***5640—திரு. R.D. சேகர்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் ஒரு புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா என்று கேள்வி எழுப்பியிருக்கிறார். தற்போது அவ்வாறு அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கின்ற கருத்துரு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள்.*

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், எங்கள் இளைஞரணிச் செயலாளர் அவர்களையும் வணங்குகிறேன்.

2022 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, தொழிலாளர்களும், ஏழை எளிய மக்களும் அதிக அளவில் வசிக்கின்ற பகுதியாக உள்ளது. அப்பகுதி மக்களின் பிள்ளைகள் வெளி இடங்களுக்குச் சென்று, தொழிற்பயிற்சி பெறுகிற வாய்ப்பும், அதற்கான பொருளாதார வசதியும் குறைவாக இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என் கோரிக்கையினை மறுபரிசீலனை செய்து பெரம்பூர் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டத்தில் 5 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், 19 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் உள்ளன. அரசால் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை, 6,666 ஆகும். தற்போது பூர்த்தி செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2,817 ஆகும். இன்னும் 3,849 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இன்னும் அதிக அளவில் மாணவர்கள் சேர்க்கப்படும் அளவிற்கு இடங்கள் காலியாக இருப்பதன் காரணத்தினால், அருமைச் சகோதரர், சட்டமன்ற உறுப்பினர் அவர்களது கோரிக்கையான பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது என்பது தற்போது இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டாவதாக எழுப்பவிருக்கின்ற வினா, மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டதாக இல்லாமல் இருந்தாலும்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் துறை சார்ந்த வினாவாக இருப்பதால், கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவின் No.1 மாநிலமாக மாற்றுவதற்கு பணியாற்றிக் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்று வருகின்ற

[2022 ஏப்ரல் 18

வேலைவாய்ப்பு முகாம்களைப்போல், பெரம்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்றவகையில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய மாவட்டத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்திருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது ஆணையை, அறிவுரையை ஏற்று, இதுவரையில் 56 இடங்களில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி, 69,010 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், நேற்றைய முன்தினம் கூட, திண்டுக்கல் மாவட்டத்திற்குச் சென்று, ஒட்டன்சத்திரம் தொகுதியில் preliminary inspection நடத்தப்பட்டது. ஒரு வேலைவாய்ப்பு முகாம் நடத்தவேண்டுமானால், திடீரென்று நடத்த இயலாது. அந்த மாவட்டத்திற்குச் சென்று, அங்கிருக்கின்ற மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திறன் அலுவலர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள், சமூக நலத் துறை அலுவலர்கள், மகளிர் மேம்பாட்டுத் திட்டத் துறை, மருத்துவத் துறை, தீயணைப்புத் துறை போன்ற பல்வேறு அரசுத் துறை அலுவலர்களோடு இணைந்து ஆய்வு செய்யப்பட வேண்டும். தற்போது மாவட்டங்களில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தினால், சற்றேறக்குறைய 25,000 எண்ணிக்கைக்குக் குறையாத அளவில் படித்த இளைஞர்கள் வருகிறார்கள். அந்தவகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், செங்கல்பட்டு மாவட்டம், Crescent கல்லூரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு 8,752 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான உத்தரவாதத்தை வழங்கினார். அந்த நிகழ்ச்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) 72,000 இளைஞர்கள் வருகை புரிந்து பதிவு செய்திருக்கின்றனர்.

2022 ஏப்ரல் 18]

முற்பகல் 11–05

அந்த அடிப்படையில் ஒட்டன்சத்திரத்திலும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினால், ஒட்டன்சத்திரத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர முடியும் என்ற நம்பிக்கை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே இருக்கின்றது. நேற்று முன்தினம் சென்று ஆய்வு நடத்திவிட்டு வந்திருக்கிறோம். ஒட்டன்சத்திரம் மட்டுமல்ல, அதற்கு அடுத்தபடியாக, தஞ்சாவூரிலே மே மாதம் 8 ஆம் தேதியும், அதற்குப் பிறகு கள்ளக்குறிச்சியிலும், அடுத்த மாதம் 22 ஆம் தேதி கிருஷ்ணகிரியிலும் அதற்கு அடுத்தபடியாக பெரம்பலூரிலும் நடைபெறவிருக்கிறது. ஆகவே, பல்வேறு மாவட்டங்களில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த ஆட்சியில், இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையால், வேலைவாய்ப்பு முகாம்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அந்த அடிப்படையில், அன்புச் சகோதரர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்களுடைய தொகுதியிலும் நிச்சயமாக வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிருக்காக பல நல்ல திட்டங்களை அறிவித்து, செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய நமது மாண்புமிகு மக்களின் முதல்வர் ஆட்சியிலே, மகளிர் படித்து தொழிற்பயிற்சியைப் பெறுவதற்காக, தென் மாவட்டங்களிலே, மதுரையை அடுத்து நாகர்கோவிலில்தான் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் இருக்கிறது. விருதுநகரில் கூடிய விரைவிலே பின்னலாடை தொழிற்பூங்கா அமையவிருக்கின்ற காரணத்தினால், விருதுநகரிலே பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2022 ஏப்ரல் 18*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், பெண்களுக்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 50 சதவிகித இடத்தை உள்ளாட்சித் துறையில் கொடுத்து, எங்கு பார்த்தாலும், பெண்கள்தான் அதிகமான அளவிற்கு இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருதுநகர் மாவட்டத்திலே பெண்களுக்கு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். விருதுநகர் மாவட்டம்தான், அதிகமான அளவிற்கு ஆலைகள், தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்ற மாவட்டம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவர்களோடு கலந்தாலோசனை செய்து, பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கக் கோரும் அவருடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

14-4-2022 அன்று மாண்புமிகு ஆளுநர் அளித்த தேநீர் விருந்தில் தமிழக அரசு சார்பில் கலந்து கொள்ள இயலாத நிலை தொடர்பான மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*